மே 17, 2015

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

*இனிமையான குழந்தாய்: நீ என்ன செய்துக்கொண்டிருந்தாலும் சரி, நீ உன்னுடைய எல்லைக்குட்பட்ட குடும்பத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாலும் அல்லது ஒரு சேவை மையத்தை இயங்கும் கருவியாக இருந்தாலும், தொடர்ந்தும் உன்னிடத்தில் உலகத்திற்குக் கருணை உணர்வுகள் இருக்கட்டும். உலகில் இருக்கும் அனைத்து ஆத்மாக்களையும் தொடர்ந்தும் உன் முன் வைத்திரு. ஆத்மாக்கள் எவ்வளவு தொலைவில் இருக்கின்றார்கள் என்பது ஒரு விஷயம் அல்ல, உன்னுடைய விழிப்புணர்வில், அவர்கள் தொடர்ந்தும் உனக்கு நெருக்கமானவர்களாக அல்லது உனக்கு முன் இருக்க வேண்டும்.*

*இனிமையான பாபா, நாள் பொழுதில் மௌன சக்தியின் விழிப்புணர்வில் கவனம் வைப்பேன் என்று மீண்டும் உறுதி செய்து கொள்கின்றேன். நான் தந்தையுடன் ஆத்மாவாகிய என்னை இணைத்துக்கொள்வேன். மேலும் என்னுடைய மேன்மையான உணர்வுகளையும் நல்லாசிகளையும் வெளிக்கொண்டு வருவேன். இந்த நிசப்தமான இடத்தில், வெகு தொலைவில் இருக்கும் ஆத்மாக்களையும் எனக்கு நெருக்கமாக இருப்பதாக அனுபவம் செய்கின்றேன்.*

**சமார்த்தி அல்லது சக்தி**

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

*பாபா ஆத்மாவிற்கு: இந்த நேரத்தில் நீங்கள் மௌன சக்தியை சேகரித்துக்கொள்ள வேண்டும். அனைத்து வீணான எண்ணங்களையும் முடித்துவிட்டு ஒரு சக்திவாய்ந்த எண்ணத்தில் உங்கள் மனதை நிலைநிறுத்துங்கள்.*

*நான் ஓர் உள்நோக்கு முகமான மனோபாவத்தைக் கொண்டிருக்கத் திடமான எண்ணம் கொண்டிருக்கின்றேன். என்னுடைய மனோபாவத்தை எனக்குள்ளிருக்கும் மௌனத்துடன் இணைத்துக்கொண்டு அதைச் சாராம்சத்தில் கொண்டுவருவேன். என்னுடைய நன்மைபயக்கும் மனப்பான்மை, ஆன்மீக மௌனத்தின் அற்புதமான ஆதாரமாக ஒரு சக்திவாய்ந்த சுற்றுசூழலை உருவாக்கும்.*

**திருஷ்டி அல்லது தூய பார்வை**

*பாபா ஆத்மாவிற்கு: பஞ்ச தத்துவங்களுக்கு அப்பால் வசிக்கும் ஒருவர் உனக்கு வெகுமதி கொடுக்கும் பொருட்டு வருகின்றார். கடவுள் உங்களைக் குறித்து மகிழ்ச்சியாக இருக்கும்போது, கூரையைத் திறந்து உங்களுக்கு வேண்டிய அனைத்தையும் கொடுப்பார் என்று பக்தர்கள் கூறுவார்கள். எனவே, இங்கேயும் கூட, அவர் ஆகாயத் தத்துவத்திற்கு அப்பாலிருந்து உங்களுக்கு வெகுமதி கொடுக்கும் பொருட்டு வருகின்றார். உன்னுடைய அதிர்ஷ்டம் மிகவும் சிறந்தது, நடைமுறையில் சாத்தியமற்றது கூடச் சாத்தியமாகின்றது.*

*நான் என்னுடைய அதிர்ஷ்டத்தை என்னுடைய நடைமுறை வாழ்க்கையில் வாழ உறுதியாக இருக்கிறேன். என்னுடைய இலக்கிற்கு என்னை வழிநடத்தும் என்னுடைய ஆன்மீகத் தந்தை, ஆசிரியர் மற்றும் சத்குருவின் அன்பான ஆதரவில் நான் இருக்க வேண்டும்.*

**ஒரு அலையை உருவாக்குதல்**

நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஒரு அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.

*குறிப்பு 1: சாய்வு வார்த்தைகள் அந்தநாள் முரளியிலிருந்து தொகுக்கப்பட்டவை.*

குறிப்பு 2: இந்த வண்ணத்தில் இருக்கும் வார்த்தைகள் ஒவ்வொரு நாளும் மாறாமல் இருக்கும்.